குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
எஸ்.டி.சி.எண்.43/2020

2021 ம் ஆண்டு அக்டோபர் 22-ஆம் நாள் வெள்ளி கிழமை எதிரி தரப்பு சாட்சியாகிய 2-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.மதி. உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அழகர்சாமி | வயது | : 51 |
| த/பெ | : மஞ்சமலை | தொழில் | :அஜிஸ்டண்ட் ஜெயிலர் |
| ஊர் | : **G.I**.ஜெயில் குவார்ட்ஸ் | சமயம் | : இந்து |
| வட்டம் | : மத்திய சிறை | ஜாதி | : மறவர் |
| மாவட்டம் | : மதுரை | | |

முதல் விசாரணை. எ சா 2

நான் தற்போது மதுரை சென்ட்ரல் சிறையில் அசிஸ்டண்ட் ஜெயிலராக பணிபுரிகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து சம்மன் கிடைக்கப்பெற்றதன் பேரில் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன். எமசா ஆ 1 எங்கள் சிறை கண்காணிப்பாளர் மதுரை மத்திய சிறை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிய கடிதம் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் பொறுத்து எனக்கு தெரியும். அதில் கண்டுள்ளவாறு எங்களால் நீதிமன்றத்தின் மூலம் எதிரி கேட்டிருந்த தகவல்கள் மற்றும் ஆவணங்களை எமசா ஆ 1- இல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் சமர்ப்பிக்க இயலவில்லை. (சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். )

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

01-03-2018-ஆம் தேதி கம்ப்யூட்டர் உறார்ட் டிஸ்க்கில் உள்ள சங்கதிகளை எங்களால் சரியாக எடுக்க முடியாத காரணத்தால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. மதுரை மத்தியசிறையில் உள்ள தண்டனை கைதிகளை பார்வையாளர்கள் பார்க்க கூடிய தினங்கள் என்ன என்றால் செவ்வாய் மற்றும் வியாழன் கிழமை ஆகும். கம்ப்யூட்டர் உறார்ட் டிஸ்க்கை சரியாக பராமரிக்காமல் இருந்தது சிறை துறையின் அலட்சியத்தை காட்டுகிறது என்றால் சரியல்ல. 10-08-2018-தேதிக்கு பின்னிட்டு உள்ள கணிணி ஆக்கம் செய்யப்பட்ட தகவல்கள் எங்கள் வசம் உள்ளன. 01-03-2018 முதல் 4 மாதங்கள் வரை கணிணி ஆக்கம் செய்யப்பட்ட தகவல்கள் அழிந்து விட்ட காரணத்தாலும, அதை எங்கள் துறையினரால் திரும்ப எடுக்க முடியாத காரணத்தாலும் நீதிமன்றததின் மூலம் எதிரி கேட்டட தகவல்களை சமர்ப்பிக்க இயலவில்லை. 01-03-2018-ஆஜர் எதிரி தன் கணவரை பார்க்க மதுரை மத்திய சிறைக்கு வந்திருந்தார் என்றால் அது பற்றிஎனக்கு தெரியாது. ஆவணங்கள் மூலம் பார்த்து கூற இயலும் என்றால் மேற்படி 01-03-2018 க்குண்டான ஆவணங்கள் கணிணியில் அழிந்து விட்ட காரணத்தால் அதை பார்த்து கூற இயலவில்லை. இவ்வாறு நான் கூறுவது சிறை துறையின் பொறுப்பற்ற தன்மையை காண்பிக்கிறது என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)

ஓம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.